WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:12 | 15.11.2023 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# யாழ்ப்பாணத்தில் கடும் மழை நூற்றுக்கணக்கானோர் பாதிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்று (14) காலை 8.30 மணிமுதல் இன்று (15) காலை 8.30 மணி வரையான மழைவீழ்ச்சி பதிவை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணத்தில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மழை வீழ்ச்சி தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சுவேலியில் 175.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பருத்தித்துறையில் 170.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தெல்லிப்பளையில் 139.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் மீசாலையில் 133 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தொல்புரத்தில் 118 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்தியில் 68.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் கோட்டை பகுதியில் 58.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் சாவகச்சேரியில் 34.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் அம்பனில் 24.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நயினாதீவில் 6.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நெடுந்தீவில் 2.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சியில் 99.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் ஆனையிறவில் 56.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் அக்கராயனில் 128.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 94 குடும்பங்களைச் சேர்ந்த 317பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 197 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொலிகண்டி பகுதியில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதே பகுதியில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 36பேர் ஒரு பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இந்து ஆலயம் ஒன்றிற்கு மேலே அரசமரம் ஒன்று விழுந்ததால் ஆலயம் சேதமடைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## நாட்டை திவாலாக்கியவர்களிடம் நட்டஈடு கேளுங்கள் சஜித்

நாட்டை வங்குரோத்தாக்கிய குழுவை உச்ச நீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ள நிலையில், பொருளாதார திவால்நிலை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்களிடம் இழப்பீடு கோருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (15) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார திவால்நிலைக்கு காரணமானவர்களை பகிரங்கப்படுத்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது என கூறிய எதிர்க்கட்சித்தலைவர், ஆட்சியாளர்கள் அரசின் கொள்கைகளை அமுல்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

## நட்டஈடு வழங்க ராஜபக்சவிடம் போதுமான பணம் உள்ளது – சுமந்திரன்

உச்ச நீதிமன்றத்தினால் நட்டஈடு வழங்கப்படுமாயின் இந்த நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கு வழங்குவதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியில் போதுமான பணம் வைத்திருப்பதாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மீட்பதற்கான நடவடிக்கைகள் இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார்.

ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியில் வைத்திருக்கும் பணத்திலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். நாட்டிற்கு வெளியே வைக்கப்பட்டுள்ள அனைத்துப்பணத்தையும் கொண்டு வரமுடியும். அந்தப் பணத்தில்தான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். அப்போதைய ஜனாதிபதி, அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களுடன் பணியாற்றிய பலர் பொதுப் பணம் திருடப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது, இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீடு கோருவதற்கு உரிமை உள்ளது என்றும் திருடப்பட்ட பணத்தை திரும்பக் கொண்டு வரவும் பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெறச் செய்யவும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக அவதூறு வழக்கு

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

“அமைச்சரின் தொடர்ச்சியான மற்றும் சேதப்படுத்தும் அவதூறு அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை கிரிக்கெட் அதன் நற்பெயரையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க ஒரு தீர்க்கமான நடவடிக்கையை எடுத்துள்ளது. எனவே, 13 நவம்பர் 2023 அன்று, இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் துணைத் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கூட்டாக ஒரு மனுவை தாக்கல் செய்தனர். இலங்கைக் கிரிக்கெட் சார்பில் மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நெடுந்தீவில் 750ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்பு!

நெடுந்தீவு கிழக்கு 15 வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் இல்லாத தனியார் காணியில் 750 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிக்கு ரவைகள் நேற்று (14) மீட்கப்பட்டன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவு பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றனர்.

ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடாத்திய தேடுதலில் ரி 56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 750ற்கும் மேற்பட்ட ரவைகள் மீட்கப்பட்டன.

நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் முடிவுறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

# மாணவர்களின் மேலதிக வகுப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் வடமாகாண ஆளுநர்

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கும் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் சிறுவர் மேம்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த விசேட சந்திப்பு நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இதன்போது ஆளுநர் வலியுறுத்தினார். அதிகாலை தொடக்கம், இரவு வரை மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளில் தங்க வைக்கப்படுவதால், மாணவர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை என இதன்போது கௌரவ ஆளுநர் கூறினார்.

# 2025 உலகக்கண்காட்சியிலிருந்து இரண்டு நாடுகள் விலகின




ஒசாகாவில் 2025 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கண்காட்சியிலிருந்து மெக்சிக்கோ, எஸ்டோனியா ஆகிய நாடுகள் விலகியுள்ளதாக, ஜப்பானின் அமைச்சர் செவ்வாயன்று தெரிவித்தார், வெளிநாட்டு பங்கேற்பாளர்கள் தங்கள் சொந்த பெவிலியன்களை உருவாக்க திட்டமிட்டுள்ளதால் கட்டுமான செலவுகள் அதிகரித்து வருகின்றன.

டென்மார்க், பின்லாந்து உட்பட கூடுதலாக ஒன்பது நாடுகள் மேற்கு ஜப்பானில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்க முடிவு செய்துள்ளன, ஹனாகோ ஜிமி கூறினார்.

மார்ச் மாத நிலவரப்படி, எட்டு சர்வதேச அமைப்புகளுடன் சேர்த்து மொத்தம் 153 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் தங்கள் பங்கேற்பை அறிவித்துள்ளன. சமீபத்திய எண்ணிக்கையில், இந்த எண்ணிக்கை 160 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் மற்றும் ஒன்பது சர்வதேச நிறுவனங்கள் என்று ஜப்பானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# கடத்தப்பட்ட ஸிம்பாப்வே எதிர்க்கட்சி ஆர்வலர் கொலை

பிரச்சாரத்தின் போது கடத்தப்பட்ட பின்னர் மசாயா சித்திரவதை செய்யப்பட்டு அவரது உடலை ஹராரேவின் புறநகரில் வீசியதாகக் கூறப்படுகிறது.

ஹராரேவுக்கு வெளியே அரசியல் பிரச்சாரத்தின் போது சனிக்கிழமை கடத்தப்பட்ட ஸிம்பாப்வே எதிர்க்கட்சி ஆர்வலர் ஒருவர் இறந்து கிடந்தார் என்று மாற்றத்திற்கான குடிமக்கள் கூட்டணிக்கட்சி தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பல வாரங்களில் கடத்தப்படுவது இது இரண்டாவது முறையாகும்.



டிசம்பர் 9 ஆம் வாமையதி இடைத்தேர்தலுக்கு முன்னதாக இன் வேட்பாளருக்காக பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது தப்புமனேயி மசாயா அடையாளம் தெரியாத நபர்களால் வாகனத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

செய்தித் தொடர்பாளர் Promise Mkwananzi செவ்வாயன்று ராய்ட்டர்ஸிடம் மசாயா சித்திரவதை செய்யப்பட்டு ஹராரேவின் புறநகர்ப் பகுதியில் வீசப்பட்டதாகக் கூறினார்.

அவரது உடல் பின்னர் மத்திய ஹராரேயிலிருந்து 3 மைல் (5 கி.மீ) தொலைவில் உள்ள பரிரென்யத்வா மருத்துவமனையில் உள்ள பிணவறைக்கு மாற்றப்பட்டது, அங்கு அவரைத் தேடி வந்த உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்டது.

# இந்திய எல்லைக்குள் நுழைந்த 5000 மியன்மார் மக்கள்

கிளர்ச்சியாளர்களுக்கும் மியன்மார் இராணுவத்துக்கும் இடையில்நடந்த மோதலால் பாதிக்கப்பட்ட 5,000 மியன்மார் பிரஜைகளுடன் அண்டை நாட்டைச் சேர்ந்த 39 இராணுவ வீரர்களும் திங்கட்கிழமை மாலை இந்தியாவுக்குள் நுழைந்து சோகாவ்தாரில் மிசோரம் காவல்துறையிடம் சரணடைந்தனர். மத்திய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, அவர்கள் எல்லையில் நியமிக்கப்பட்ட அசாம் ரைபிள்ஸ் வீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# காஸா மருத்துவமனையில் இஸ்ரேல் இராணுவம் தேடுதல்



காஸா நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள அல்ஷிபா மருத்துவமனையை இஸ்ரேல் தரைப் படை சுற்றிவளைத்துள்ளது. அல்ஷிபா மருத்துவ மனை வளாகத்திலிருந்து இஸ்ரேல் படையினர் மீது துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு இஸ்ரேல் படை பதிலடி கொடுத்தது. அதேவேளை, காஸாமுனையின் மிகப் பெரிய மருத்துவமனையான அல்ஷிபா மருத்துவமனையின் அடித்தளத்தில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைமையிடம் அமைந்துள்ளதாக இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில், அல்ஷிபா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் இன்று அதிரடியாக நுழைந்தனர். மருத்துவமனையின் தரைத்தளம் உட்பட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் படையினர் சோதனை நடத்தினர். அறுவைச் சிகிச்சை மற்றும் அவசரசிகிச்சை பிரிவுகள் அமைந்துள்ள பகுதிகளிலும் நுழைந்து இஸ்ரேல் படையினர் சோதனை நடத்தினர்.

# பயணக் கைதிகளை விடுவிக்க நிபந்தனை

பணயக்கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி ஹமாஸ் தரப்பினருடன் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான கட்டார், பேச்சு வார்த்தை நடத்திவருகிறது. இந்நிலையில், தங்கள் தரப்பு நிலைப்பாட்டையும் கோரிக்கைகளையும் ஹமாஸ் அமைப்பினர் வெளியிட்டுள்ளனர்.



அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: காஸாவில் 5 நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 70 பணயக்கைதிகளை விடுவிக்க நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அப்போர் நிறுத்தம் முழுமையானதாக இருக்கவேண்டும். காஸா முனைப் பகுதியில் அனைத்து பகுதிகளுக்கும் மனிதாபிமான உதவிகள் கிடைப்பதையும் இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும். நாங்கள் வாய்ப்பு அளித்து விட்டோம் ஆனால், இஸ்ரேல் வேண்டுமென்றே காலதாமதம் செய்து கோரிக்கைகளை புறக்கணித்து, முடிவு எடுப்பதைத் தள்ளிப் போடுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க சவுதி மறுப்பு

“கடந்த ஒக்ரோபர் 7 அன்று தொடங்கிய பாலஸ்தீன காஸாவின் ஹமாஸ் அமைப்பினர் மீதான இஸ்ரேல் தாக்குதல், தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பின்னணியில் அரபு நாடுகள் பங்கேற்ற இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பின் சந்திப்பு, சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெற்றது. இதில் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டது.

இத்தீர்மானத்தை சவுதி அரேபியா ஆதரவு அளிக்கவில்லை. சவுதி அரேபியாவைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பக்ரைன், சூடான், மொரோக்கோ, எகிப்து, ஜோர்டான், மவுரிடானியா மற்றும் ஜிபவுடி ஆகிய நாடுகளும் இத்தீர்மானத்தை எதிர்த்தன. ஒக்ரோபர் 7 இற்கு முன்பாக இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையே இரு நாட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் உடன்படிக்கைகள் ஏற்பட இருந்தன. ஆனால், ஒக்ரோபர் 7 துவங்கிய போரின் காரணமாக அந்த முயற்சிகள் நிறுத்தப்பட்டன. தற்போது இஸ்ரேலுக்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கும் வகையில் சவுதி அரேபியா நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது மட்டுமின்றி, இஸ்ரேலிய இராணுவ படையை பயங்கரவாதிகள் அமைப்பாக பிரகடனப்படுத்துமாறு ஈரான் விடுத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணம்

கொரோனா எனும் கொடும் வைரஸ் உலகளாவிய ரீதியில் பொருளாதாரத்தைச் சீரழித்தது. உலகச் சந்தையின் விலை ஏற்றம் உலக நாடுகளையும் பாதித்தது. இலங்கையும் அதற்கு விதி விலக்கல்ல. வீழ்ந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்த முயற்சித்த அரசியல்வாதிகள் வெற்றி பெறவில்லை. ஆனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களின் பெயர்ப்பட்டியலை உச்ச நீதிமன்றம் வெளிப்படுத்தி அதிர்ச்சியளித்துள்ளது.

**சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் நல்லாட்சி அமைப்புகளின் பொதுநலன் வழக்குகளைத் தொடர்ந்து SL இன் நெருக்கடி நிலைமைக்கு வழிவகுத்த முடிவுகளுக்கு பதிலளித்தவர்களின் நடத்தை நேரடியாக பங்களித்ததாக நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.**

**தவறுகள் CBSL ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர மற்றும் நாணயச் சபை உறுப்பினர்களும் பொறுப்பு.**

**பொருளாதாரத்தை எதிர்மறையாகப் பாதிக்கும் விடயங்களைத் தீர்க்க அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், மேலும் தாக்கத்தை மோசமாக்கக்கூடாது என்று கூறுகிறார்.**

**விதிகளுக்கு பதிலளித்தவர்கள் பொது நம்பிக்கையை மீறியுள்ளனர் மற்றும் அரசியலமைப்பின் பிரிவு 12 (1) ஐ மீறியுள்ளனர்.**

இலங்கையின் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்கள் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்பு என்றும் அதன் மூலம் பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பில் நேற்று தீர்ப்பளித்தது. 2019 மற்றும் 2022 க்கு இடையில் மத்திய வங்கியின் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோரே காரணம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது மக்களின் நம்பிக்கையை மீறியதுடன், அரசியலமைப்பின் 12 (1) ஆவது சரத்தை மீறியதுடன், பொருளாதார நிர்வாகத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது. நெருக்கடி நிலைமைக்கு வழிவகுத்த முடிவுகளுக்கு பிரதிவாதிகளின் நடத்தை நேரடியாக பங்களித்தது என்றும் பொருளாதாரத்தை எதிர்மறையாகப் பாதிக்கும் விடயங்களைத் தீர்ப்பதற்கு அவர்கள் அறிந்திருக்க வேண்டும், நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் மற்றும் தாக்கத்தை மேலும் மோசமாக்காமல் பொறுப்புக்கூற வேண்டும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது, நாட்டின் நலனுக்காக செயல்பட வேண்டும்.

பொதுமக்களின் நலனுக்காகத் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு அரச அலுவலர்களுக்கு உள்ளது என்றும் பதிலளிப்பவர்களுக்கு பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்கு உயர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசியலமைப்பின் உத்தரவுகளின் படி கடமைகளை ஆற்றுவதற்கு கடமைப்பட்டவர்கள் என்றும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. பேராசிரியர் மஹிம் மெண்டிஸ், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ஜூலியன் ஜெஹான் கனகரெட்னா ஆகியோரும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவும் தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்து உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ ஆகியோர் கூட்டாக பெரும்பான்மை தீர்ப்பை வழங்கிய போதும், நீதியரசர் பிரியந்த ஜயவர்தன இதற்கு மறுப்பு தெரிவித்தார்.

அரசல் புரசலாக மக்களால் கூறப்பட்டவற்றை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அரசியல் நெருக்கடிகளை முன்னைய அரசாங்கம் உரியமுறையில் கையாளவில்லை என அப்போது விமர்சனம் எழுந்தது. சர்வ வல்லமை பொருந்திய அரசாங்கம் அப்போது அதனைக் கண்டுகொள்ளவில்லை. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது மனம்போன போக்கில் செயற்படக்கூடாது என்பதை சகல அரசியல்வாதிகளும் இந்தத் தீர்ப்பை கவனத்துடன் நோக்க வேண்டும்

பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துள்ளது.

# சிவனொளிபாதமலைக்கு பொலித்தீன் கொண்டு செல்லத்தடை

சிவனொளிபாத யாத்திரைக் காலத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார். ஒவ்வொரு யாத்திரை காலத்தின் முடிவிலும் நூற்றுக்கணக்கான தொன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் ஸ்ரீ பாத மலை சுற்றுச்சூழலில் சேர்வதாகவும் நுவரெலியா மாவட்ட செயலகம் மஸ்கெலியா பிரதேச சபைக்கு வருடாந்தம் 2 மில்லியன் ரூபாவை பொலித்தீன் அகற்றுவதற்கு வழங்குவதாகவும் அவர் கூறினார்.

# கடத்தல்காரர்களுக்கு கடும் தண்டனை

தங்கம், இலத்திரனியல் பொருட்கள் உட்பட தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை விதிக்க இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது இந்த வருடம் முதல் 10 மாதங்களுக்குள் 760 பில்லியன் ரூபாய் வசூலித்துள்ளதாகவும் இந்த வருடத்துக்குள் 925 பில்லியன் ரூபா வருமானத்தை திரட்ட முடியும் எனவும் இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது.

# கிரிக்கெட் வீரர்களுக்கு தவறான ஊசி மருந்துகள் வழங்கப்பட்டன தயாசிறி ஜயசேகர

இலங்கை கிரிக்கெட்டின் மருத்துவக் குழுவில் உள்ள ஒரு மருத்துவர் தேசிய அணி வீரர்களுக்கு வலி நிவாரணிகளை வழங்கியதாகவும் இதனால் வீரர்களுக்கு உபாதைகள் ஏற்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொது நிறுவனங்களுக்கான, பாராளுமன்ற கோப் குழுவின் முன், இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"வன் சொட்" என்று அழைக்கப்படும் இந்த மருத்துவர் ஒரு தொழில் முறை விளையாட்டு மருத்துவரல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுதலை

எல்லை தாண்டி சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் ஒருவருக்கு சிறைத்தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 21 பேரும் ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட, 18 மாத சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று (15) ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்ற போது 22 மீனவர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய நிலையில் அவருக்கு சிறை தண்டனை விதித்தும் ஏனைய 21 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

# கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டம்

சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஆரம்ப வைபவம் அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. முஹம்மது பைஷல் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எஸ்.அப்துல் ஹை பிரதம அதிதியாக கலந்துகொண்டார். கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.நிம்ஸான், உபதலைவர், பொருளாளர், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# பட்ஜெட்டை நிராகரிக்கிறது அரசாங்க பொது ஊழியர் சங்கம்

அரசாங்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு நாட்டு மக்களை முற்றிலும் ஏமாற்றுகின்ற கபட நாடகமாகும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை தலைமை காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.




அரசாங்கத்தின் உத்தேச வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில்,

நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க வேண்டும் என்கிற பிரதான நோக்கத்தை தாரக மந்திரமாக முன்னிறுத்தி கொண்டு ஜனாதிபதி கதிரைக்கு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், நிதி அமைச்சராக இருந்து கொண்டு இவர் முன்வைத்துள்ள வரவுசெலவுத்திட்டம் நாட்டு மக்களுக்கு ஏமாற்றத்தையே தந்துள்ளது.

இது அரசாங்கத்தின் கஜானாவை நிரப்புவதற்கான அல்லது தக்க வைப்பதற்கான வரவுசெலவுத் திட்டமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றதே ஒழிய குறைந்த பட்சம் நாட்டு மக்களின் வயிற்றை நிரப்புவதற்கான வரவு செலவுத் திட்டமாக கூட இல்லை.

அதிகப்படியான அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் விலைவாசிகள் மற்றும் கட்டணங்கள் ரொக்கெற் வேகத்தில் அதிகரித்து கொண்டு செல்கின்றனவே ஒழிய இவற்றுக்கான உரிய, உகந்த நிவாரணங்களை உத்தேச பட்ஜெட் கொண்டிருப்பதாக இல்லை.

மக்கள் சிக்கனமாக வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்ற அரசாங்கம் மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும், அரசாங்க தரப்பினர் அனைவரும் சுகபோகமாக ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். பொறுப்பு வாய்ந்த தொழிற்சங்கம் என்ற வகையில் நாம் இதை நிராகரிக்கின்றோம். இந்த பட்ஜெட் நிறைவேற்றப்படவே கூடாது என்றார்.

# அமைச்சர் டக்ளஸின் பிறந்தநாள் அன்பளிப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 66 ஆவது பிறந்த தினத்தையிட்டு கட்சி உறுப்பினர் அன்தனிசில் ராஜ்குமார் அவருக்கு நல்லாசி வேண்டி பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு உலர் உணவுப் பொதியை நேற்று செவ்வாய்க்கிழமை (14) கட்சி காரியாலயத்தில் வழங்கி வைத்தார்.




ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் அன்தனிசில் ராஜ்குமார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்த தினத்தையிட்டு அவருக்கு நல்லாசி வேண்டி உலர் உணவுப் பொதிகளை தானமாக வழங்கும் நிகழ்வு கட்சி காரியாலயத்தில் இடம் பெற்றது

அதிதிகளாக கட்சி மாவட்ட அமைப்பாளர் சிவானந்தராஜா கட்சியின் உறுப்பினர் அன்தனிசில் ராஜ்குமார் அவரது குடும்பத்தினர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த வயோதிப பெண்கள் 20 பேருக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.

# வவுனியாவில் 15 குளங்கள் உடைப்பு

வவுனியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை, வெள்ளம் காரணமாக 93 குளங்கள் வான் பாய்வதாகவும் 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து 93 குளங்கள் வான் பாய்கின்றன. பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளன. அத்துடன், வவுனியா மாவட்டத்தில் உடைப்பெடுத்த 15 குளங்களும் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தரமற்ற மருந்தை இறக்குமதி செய்தவர் மீண்டும் விளக்கமறியலில்

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்து குப்பிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உள்நாட்டு நிறுவனத்தின் உரிமையாளர் மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்திய போது, எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மூளைக் காய்ச்சலால் கிராம சேவகர் மரணம்

புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவகரான குமாரன் குகதாசன் 48 % மூளைக் காய்ச்சலால் காலமானார்.

வயதான ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீபாவளி தினத்தன்று மயங்கி விழுந்த அவரை அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

# வலம்புரிச் சங்குடன் இளைஞர் கைது






5 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்ய தயாராக இருந்த அரிய வகை வலம்புரிச் சங்குடன் தியத்தலாவ கஹம்பிலிய புதிய கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் வலம்புரிச் சங்கை வேறு ஒருவருக்கு விற்பனை செய்ய தயாராகி வருவதாக விமானப் படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸாருடன் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாகும்

2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்தவாரம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பரீட்சைப் பெறுபேறுகளுக்கான ஆவணங்களை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# HALL OFF FAME விருது பெறும் மூவர்

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மிகவும் உயரிய விருதாகக் கருதப்படும் HALL OFF FAME விருதுக்கு இந்த ஆண்டு இரண்டு இந்தியர்களும் ஒரு இலங்கை வீரரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஐ.சி.சி கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ஜாம்பவான்களை HALL OFF FAME என்ற பட்டத்தை வழங்கி கௌரவிக்கும்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க வீரர் சேவாக், இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் அரவிந்த டீ சில்வா, இந்திய மகளிர் அணியின் முன்னாள் கப்டனான டயானா எடுல்ஜி ஆகிய மூவருக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது.




தனக்கு வழங்கப்பட்டிருக்கும் கௌரவம் குறித்துப் பேசியுள்ள சேவாக் “தமக்கு இந்தப்பட்டத்தை வழங்கிய ஐ.சி.சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் வாழ்க்கையில் கிரிக்கெட் பந்தை அடிப்பதைத்தான் என் காதலாக நான் பார்த்து வந்தேன். அதற்கு நான் நன்றியுடன் இருக்கின்றேன்” என்று சேவாக் கூறியுள்ளார். இதைத்தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் அரவிந்த டீ சில்வாக்கு HALL OFF FAME விருது கிடைத்திருக்கிறது. 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,363 ஓட்டங்களும் 38 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 9684 ஓட்டங்கள் அடித்திருக்கிறார். இலங்கை அணி 1996 உலக கோப்பை வென்ற முக்கிய காரணமாக அரவிந்த டீ சில்வா இருந்தார். இந்திய மகளிர் அணியின் முன்னாள் கப்டனான டயானா எடுல்ஜிக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது. மகளிர் கிரிக்கெட்டின் நிர்வாகியாக பணிபுரிந்து பல்வேறு மாற்றங்களை செய்திருந்தார். இதனால் அவருக்கு விருது கிடைக்கிறது.

---

# கண்காட்சிப் போட்டியிலிருந்து எம்மா ரடுகானு விலகினார்



முன்னாள் அமெரிக்க ஓபன் சாம்பியனான எம்மா ரடுகானு, மணிக்கட்டு மற்றும் கணுக்கால் அறுவை சிகிச்சையில் இருந்து மீண்டுவருவதால், டிசம்பர் மாதம் மக்காவ் டென்னிஸ் மாஸ்டர்ஸ் கண்காட்சி போட்டியில் இருந்து விலகியுள்ளார் என்று அவரது நிர்வாக நிறுவனம் திங்களன்று தெரிவித்துள்ளது.

ரடுகானு தனது அறுவைசிகிச்சைகளுக்குப் பிறகு நடவடிக்கைக்குத் திரும்பத் தயாராக இருந்தார், ஆனால் அவரது 21 ஆவது பிறந்தநாளில், தனது நேரத்தை ஓரங்கட்ட முடிவு செய்துள்ளார்.

ஏ.டி.பி பைனல்ஸ் 2023: மெட்வெ டேவ் நேரான செட்களில் ரூப்லெவ்வை வீழ்த்தினார்.

2021 இல் நியூயோர்க்கில் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை 18 வயது தகுதிப் போட்டியில் வென்ற பிரிட்டன், ஏப்ரல் முதல் விளையாடவில்லை, பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் மற்றும் யுஎஸ் ஓபனைத் தவறவிட்டார், அதே நேரத்தில் உலக தரவரிசையில் 289 ஆவது இடத்திற்கு சரிந்தார்.

ரடுகானு ஆகஸ்ட் மாதத்தில் லேசான பயிற்சியைத் தொடங்கினார், மேலும் அடுத்த சீசனில் மீண்டும் வருவதை இலக்காகக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

---

# உலக தடகள வீரர் இறுதிப் பட்டியல்

2023 ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான உலக தடகள வீரர் விருதுக்கு பட்டியலிடப்பட்ட ஐந்து தடகள வீரர்களில் நீரஜ் சோப்ராவும் ஒருவர் என உலக தடகளம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.




**நீரஜ் சோப்ரா, இந்தியா ஈட்டி எறிதல்**

உலக சாம்பியன்,

ஆசிய விளையாட்டு சாம்பியன்

**ரியான் க்ரூசர் அமெரிக்கா, குண்டு எறிதல்**

உலக சாம்பியன்

உலக சாதனை

**மொண்டோ டுப்லாண்டிஸ் - சுவீடன் - போல் வால்ட்**

உலக சாம்பியன்உலக சாதனையுடன் டயமண்ட் லீக் சாம்பியன்

கெல்வின் கிப்டம், கென்யா, மரதன்

லண்டன் மற்றும் சிக்காக்கோ மரதன் வெற்றியாளர்

மராத் தான் உலக சாதனையை முறியடித்தவர்

**நோவா லைல்ஸ்,** அமெரிக்கா, 100மீ/ 200மீ

உலக 100 மீ, 200 மீ சாம்பியன்

200 மீ ஓட்டத்தில் ஆறு இறுதிப் போட்டிகளில் தோற்கடிக்கப்படாதவர்.

டிசம்பர் 11 ஆம் திகதி உலக தடகள மேடைகளில் வெற்றியாளர் அறிவிக்கப்படுவார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 15.11.2023 அன்று வெளியிடப்பட்டது.